



## தமிழ் வளர்ச்சித் துறை

### கம்பர் விருது - 2018



விருது பெறுபவர் : **முனைவர் க. முருகேசன்**



### தகுதியுரை

**முனைவர் க. முருகேசன் அவர்கள்** கோவை மாவட்டத்தில் 27.05.1965இல் பிறந்தவர். பெற்றோர் திரு கி. கருப்பண்ணன் க. அரங்கம்மாள் ஆவர். இவர் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

இவர் கம்பன் படைத்த கவின்மிகு பாத்திரங்கள், கம்பனில் தெய்வமும் மகனும், இலக்கியச் சாரலில் அறிவியல் துளிகள், சங்க இலக்கியத் தேனமுதம் போன்ற 11 நூல்களை இயற்றினார். சித்தாந்தரத்தினம், செந்தமிழ்ச் செம்மல், தமிழ்ச்சுடர், செந்தமிழ் ஆய்வுச் சிகரம், செந்தமிழ்வேந்தர் உள்ளிட்ட 7 விருதுகளைப் பெற்றுள்ளார்.

கோவை கம்பன் கழகத்தில் இணைச் செயலாளராக 16 ஆண்டுகள், இளங்கோவடிகள் இலக்கிய மன்றச் செயலாளராக 15 ஆண்டுகள் எனப் பணிபுரிந்து இலக்கியப் பணியாற்றி வருகிறார். இவரது "செந்தமிழ்க் கோயிலின் சிந்தனைச் சிற்பம்" என்னும் நூல் தன்னாட்சிக் கல்லூரிப் பாடத்திட்டத்தில் இளங்கலைத் தமிழ் இலக்கிய மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

கவியரசர் கம்பரின் நோக்கு நடையில் தமிழ் இலக்கியப் பணிகள் ஆற்றி வரும் இவரின் தமிழ் இலக்கியப் பணியைப் பாராட்டித் தமிழ்நாடு அரசு 2018ஆம் ஆண்டிற்கான **கம்பர் விருதினை** அளித்து ஒரு இலட்சம் உருபாய்க்கான காசோலையையும் தங்கப்பதக்கத்தையும் வழங்கிச் சிறப்பிக்கின்றது.

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009
திருவள்ளுவராண்டு 2050. மாசி 7
19.02.2019

கே. பழனிசாமி

**எடப்பாடி கே. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்